

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | நவம்பர் 10, 2022 | புரட்சி 21 | முழக்கம் 43 | விலை: ரூ.3.00

# ஆங்கிலம், இந்தி ஊடகங்களில் 88% தலைமைப் பதவிகள், உயர்ஜாதியினர் கைகளில்

"தமிழர்களின் நிலையை எடுத்துக்கூற ஒரு பத்திரிக்கை கூட இல்லையே" என்று பெரியார் 1925இல் குடிஅரசு இதழைத் தொடங்கினார். தொடர்ந்து ரிவோல்ட், பகுத்தறிவு, புரட்சி, உண்மை, விடுதலை ஆகிய இதழ்களையும் பெரியார் தொடங்கி சமூக இழிவுகளை எளிய மக்களிடம் கடத்தினார்.

இந்திய ஒன்றியத்தில், அச்சு, தொலைக் காட்சி, டிஜிட்டல் ஊடகங்களில் (ஆங்கிலம், இந்தி) 88% உயர் பதவிகளில், உயர் ஜாதியினர் மட்டுமே பதவியில் உள்ளனர். புள்ளி விவரங்களுடன் கட்டுரை அதை விளக்குகிறது

கிட்டத்தட்ட 88% இந்திய ஊடகங்களின் (அதாவது அச்சு, தொலைக்காட்சி, டிஜிட்டல் தளங்களின்) தலைமைப் பதவிகள் உயர்சாதியினரின் கைகளில்தான் இருக்கின்றன. 2021-2022ஆம் ஆண்டின் நிலை இது. 2018-2019ஆம் ஆண்டின் நிலையிலிருந்து எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக்ஸ்பாம் இந்தியா (Oxfam India) – நியூஸ்லாண்ட்ரி (Newslaundry) இணைந்து "Who Tells Our Stories Matters: Representation of Marginalised Caste Groups in Indian Media" என்ற தலைப்பில் ஏப்ரல் 2021 மார்ச் 2022 காலகட்டத்தில் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் நமக்கு இதைத் தெரிவிக்கிறது.

முக்கியமான அச்சு, தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் தளங்களின் 218 தலைமைப் பதவிகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 191 (88%) தலைமைப் பதவிகள் உயர்சாதியினரின் கரங்களில் இருக்கின்றன. தலித் மற்றும் பழங்குடியினரில் ஒருவர் கூட எந்த ஊடகத்திலும் தலைமைப் பதவி வகிக்கவில்லை என்பது இந்த ஆய்வு வெளிப்படுத்திய அதிர்ச்சியூட்டும் தகவல்.

2018-2019ஆம் ஆண்டின் போது 121 தலைமைப் பதவிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 106 (88%) தலைமைப் பதவிகளில் உயர் சாதியினரிடம் தான் இருந்தன. இந்த ஆய்வானது அக்டோபர் 2018 மார்ச் 2019 காலகட்டத்தில் நடத்தப்பட்டது.

நெறியாளர்கள், கட்டுரையாளர்கள் என அனைத்து நிலைகளிலும் உயர்சாதியினரின் ஆதிக்கமே நீடிக்கிறது.

**அச்சு ஊடகங்கள் :** அச்சு ஊடகங்களில் (ஆங்கிலம் மற்றும் ஹிந்தி செய்தித் தாள்களில்) எழுதப்படும் கட்டுரைகளில் 60% கட்டுரைகள் (அதாவது ஐந்தில் மூன்று) உயர்சாதியினரால் எழுதப்படு கிறது. வெறும் 10% கட்டுரைகள் மட்டுமே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரால் (Other Backward Classes) எழுதப்படுகிறது. தலித் மற்றும் பழங்குடியினரால் 5 சதவீதத்திற்கும் குறைவான கட்டுரைகளே எழுதப்படுகின்றன.

சஞ்சிகைகளை எடுத்துக் கொண்டால் பாதிக்கும் மேற்பட்ட கட்டுரைகள் உயர் சாதியினராலேயே எழுதப்படுகின்றன. சஞ்சிகைகளில் பணியாற்று பவர்களை எடுத்துக் கொண்டால் 10 சதவீதத்திற்கும் குறை வானவர்களே தலித்துகளாக உள்ளனர். பழங்குடியினரின் பிரதிநிதித் துவம் சஞ்சிகைகளில் குறிப்பிடும்படியாக இல்லை அல்லது முற்றிலுமாகவே இல்லவே இல்லை (0%) என்ற அவல நிலைதான் நீடிக்கிறது.

**தொலைக்காட்சி :** ஆங்கில செய்தி சேனல் களைப் பொறுத்தவரை 55.6% தொகுப்பாளர்கள் உயர்சாதியைச் சேர்ந்தவர்கள். 11.1% தொகுப்பாளர்கள் மட்டுமே OBC பிரிவைச் சார்ந்தவர்கள். SC மற்றும் ST வகுப்பை சார்ந்தவர்கள் ஒருவர் கூட தொகுப்பாளராக இல்லை.

ஆங்கிலம் மற்றும் ஹிந்தி செய்தி நிறுவனங்களின் பிரைம் டைம் விவாத நிகழ்ச்சிகளில்கூட 60 சதவீதத்திற்கும் மேலாக உயர்சாதியினர் தான் பங்கெடுக்கின்றனர். SC மற்றும் ST வகுப்பினரைப் பொறுத்தவரை வெறும் 5 சதவீதத்துக்கு குறைவானவர்களே விவாதங்களில் பங்கேற்கத் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**டிஜிட்டல் ஊடகங்கள் :** டிஜிட்டல் ஊடகங் களைப் பொறுத்தவரை EastMojo, Firstpost, Newslaundry, Scroll, The Wire, the News Minute, Swarajya, the Mooknayak மற்றும் the Quint ஆகிய 9 ஊடகங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதில், Newslaundry English-ன் 68.5% கட்டுரைகளும், Firstpost-ன் 61% கட்டுரைகளும், Scroll-ன் 54% கட்டுரை களும், The Wire-ன் 50% கட்டுரைகளும் உயர்சாதியினரால் எழுதப்படுபவை. Mooknayakஇல் மட்டும்தான் பெரும் பான்மையான கட்டுரைகள் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களால் எழுதப்படுகின்றன.

இந்த ஆய்வு குறித்துப் பேசிய ஆக்ஸ்பாம் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரியான அமிதாப் பெஹர் (Amitabh Behar) கூறியதாவது: "கடந்த மூன்று ஆண்டுகளில் வெளியான எங்களது இரண்டாவது அறிக்கை இது.

இந்தியாவில் உள்ள செய்தி நிறுவனங்கள் நாட்டில் உள்ள பெரும்பான்மையான விளிம்புநிலை மக்களை உள்ளடக்கிய இடம் அல்ல என்பதை இது காட்டுகிறது. தலித்துகள், பழங்குடிகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதில் ஊடகங்கள் தோல்வியடைந் துள்ளன. நாட்டில் உள்ள ஊடகங்கள் சமத்துவம் என்ற அரசியலமைப்புக் கோட்பாட்டை அதன் செய்திகளில் மட்டுமல்ல, அதன் பணியமர்த்தல் நடைமுறைகளிலும் நிலைநிறுத்த வேண்டும்".

செய்தி விவாதங்களில் அடித்தட்டு உழைக்கும் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் ஏன் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். இந்திய ஊடகங்கள் யாருடைய குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்பதற்கும் இந்த ஆய்வு ஒரு துலக்கமான சான்றாகும். அவை சங்பரிவாரங்களின் ஊதுகுழலாகச் செயல்படுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை!

**– வினவு**

# வந்தே மாதரம் தேச பக்தி பாடலா ?

பா.ஜ.க வழக்கறிஞர் அஸ்வினி குமார் உபாத்யாய், தேசிய கீதத்துக்கும் (ஜன கன மண) தேசிய பாடலுக்கும் (வந்தே மாதரம்) ஒரே அந்தஸ்து வழங்க வேண்டும் என்று டெல்லி உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்தார். இதற்கு பதிலளித்த உள்துறை அமைச்சகம், "தேசிய பாடலான வந்தே மாதரத்திற்கு எந்த அறிவுறுத்தல்களும் இல்லை. இருப் பினும் மக்கள் இரண்டு பாடல் களுக்கும் சம மரியாதை செலுத்த வேண்டும்" என்று பதில் மனுவில் கூறியுள்ளது.

வந்தே மாதரம் தேச பக்தி பாடலா? அது இந்திய ஒன்றியத்தின் பெருமையை கூறுகிறதா ?

பக்கிம் சந்திரா சட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர் 1880இல் எழுதிய 'ஆனந்த மடம்' என்ற வங்க மொழி நாவலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் அது. அப்போது ஆட்சி யிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி, முஸ்லிம் மன்னர்கள் சிலருடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் காலூன்ற முயற்சித்த காலகட்டம் அது.

முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்து விட்டு, இந்து - ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க வைணவ இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே நாவலின் மய்யமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும் போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே 'வந்தே மாதரம்'.

"நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கு இனம் - மதம் - பண்பாடு பெருமையைக் காப்பதற்கு, முஸ்லிம்களை ஒழித்தாக வேண்டும்; அவர்களை ஒழிக்காவிட்டால் நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை; 7 கோடி இந்துக்கள் வாளேந்தி களத்தில் குதிப்போம்" என்பதே வந்தே மாதரம் பாடலின் கருத்து.

வந்தே மாதரம் பாடலைப் பாடி வைணவ இந்து இளைஞர்கள் முஸ்லிம்களை கொலைசெய்து, முஸ்லிம் பெண்களை 'பாலியல்' வன்முறைக்கு உள்ளாக்கி முற்றாக ஒழித்து விட்டு, காளி தேவி முன் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

அப்போது கதாநாயகன் சத்யானந்தாவிடம், "நாம் தான் முஸ்லிம்களை அழிந்து ஒழித்து விட்டோமே; இந்து இராஜ்யம் வரவில்லையே; ஆங்கிலேயர்கள் தானே ஆட்சி செய்கிறார்கள்?" என்று கேட்கிறார்கள். அதற்கு கதையின் நாயகன் சத்யானந்தா, "இப்போது நமக்கு எதிரிகளே இல்லை; ஆங்கி லேயர்கள் நம்முடைய நண்பர்கள்; அவர்கள் தங்கள் அதிகாரங்களை நம்முடைய விஷ்ணு கடவுளுக்குத் தான் காணிக்கையாக்கியிருக்கிறார் கள்" என்று பதில் கூறுகிறார்.

இப்படி இஸ்லாமியர் ஒழிப்பையும் ஆங்கிலேயர் ஆதரவையும் கொண் டாடும் 'வந்தே மாதரம்' - மனுதர்ம கூட்டத்துக்கு தேசபக்தி பாடலாகி விட்டது. காந்தி 'வந்தே மாதரம்' பாடலை ஏற்பதற்கு மறுத்து விட்டார்.

1937இல் காங்கிரஸ், இப்பாடலில் இடம் பெற்ற இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துகளை ஏற்க மறுத்து விட்டது. தேசிய கீதமாக்க முடியாது என்று கூறி விட்டது.

2006இல் 'வந்தே மாதரம்' பாடலின் நூற்றாண்டாகக் கருதி, இந்தியா முழுதும் பள்ளிகளில் பகல் 11 மணிக்கு பா டலாம். அதில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் எதிர்ப்பு வரிகளைப் பாட வேண்டாம். விருப்பமில்லாத பள்ளிகள் வந்தே மாதரத்தைப் பாடத் தேவையில்லை என்று ஒன்றிய காங்கிரஸ் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது.

உண்மையில், 1996 - 'வந்தே மாதரம்' பாடலுக்கு நூற்றாண்டே அல்ல; 1870இல் எழுதப்பட்டு, 1882இல் ஆனந்த மடம் நாவலில் சேர்க்கப்பட்ட பாடலுக்கு 1996 எப்படி நூற்றாண்டு ஆக முடியும்?

'வந்தே மாதரம்' பாடலைப் பாட மறுப்பவர்களை தேசத் துரோகிகள் என்று அப்போது குற்றம் சாட்டியது பா.ஜ.க.! பா.ஜ.க. ஆளும் மாநிலங் களில் இப்பாடலை மதராஸாக்கள் (முஸ்லிம் பள்ளிகள்) உள்ளிட்ட அனைத்து பள்ளிகளிலும் பாட வேண் டும் என்று கட்டாயப்படுத்தியது.

ஆக, 'வந்தே மாதரம்' தேசபக்தி பாடல் அல்ல; இஸ்லாமிய வெறுப் பையும் ஆங்கிலேயர் புகழ்ச்சியையும் கொண்டது. பாடலின் முதல் இரண்டு பத்திகள், 'தாய் மண்ணைப் புகழ்கிறது' என்பதாலேயே அது தேசபக்திப் பாடலாகி விடாது.

**(விடுதலை இராசேந்திரன் எழுதிய 'ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்' நூலிலிருந்து)**

தலையங்கம்

## உச்சநீதிமன்றத்தில் மற்றொரு அயோத்தி தீர்ப்பு

உயர் ஜாதிப் பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீட்டை உறுதி செய்து உச்சநீதி மன்றத்தில் மூன்று நீதிபதிகள் தீர்ப்பளித் துள்ளனர். தலைமை நீதிபதி உட்பட 2 நீதிபதிகள், “இது அரசியல் சட்டத்திற்கு எதிரானது” என்றத் தீர்ப்பை வழங்கி யுள்ளனர். “இது சமூகநீதிக்கு பின்னடைவு என்றும் இந்திய ஒன்றியம் முழுவதும் சமூக நீதிக்கு ஆதரவான சக்திகள் ஒருங் கிணைந்து போராட முன் வர வேண்டும்” என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடனடியாக தமிழ் நாட்டின் உணர்வு களைப் பிரதிபலித்து இருக்கிறார்.

தீர்ப்பை ஆதரித்து வழங்கப்பட்ட கருத்துகள், அரசியல் சட்ட அமைப்பில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையையே கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது என்பது கடும் அதிர்ச்சியை உருவாக்கி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு கொள்கை அந்த சமூகத் திற்கான மக்கள் முன்னேற்றமடைய பயன்படவில்லை என்றும் நீதிபதிகள் தங்களது பச்சைப் பார்ப்பனியக் கருத்துகளை தீர்ப்புகளாக எழுதி வைத்துள்ளனர்.

பிராமணர் சங்க மாநாடுகளில் பேசப்படும் கருத்துக்கள், அரசியல் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டிய உச்சநீதி மன்றத்தில் குரலாக ஒலிக்கத் தொடங்கி விட்டது.

இட ஒதுக்கீடு இல்லாவிட்டால், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்த நிலைக்கு தள்ளப்பட்டிருப்பார்கள் என்பதற்கு உச்சநீதிமன்றமே அசைக்க முடியாத சான்று. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையையும், பார்ப்பன உய ர்ஜாதி நீதிபதிகளின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே இது புரியும்.

இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு மட்டும் ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று தீர்ப்பு எழுதும் நீதிமன்றங்கள் இந்து மதத்திலிருந்தும் ஜாதி ஒழிக்கப் பட வேண்டும் என்று ஒருபோதும் தீர்ப்பு எழுத மாட்டார்கள். ஜாதி அர்ச்சகர்களை உறுதி செய்யும் ஆகமங்கள் தேவை யில்லை, அது காலாவதியாகிவிட்டது என்று இதுவரை எந்தவொரு தீர்ப்பிலும் வலியுறுத்தவில்லை. மாறாக ஆகமங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றே வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

உயர் ஜாதியினருக்கான 10% இட ஒதுக்கீட்டிற்கான தேவைகள், நியாயங்கள் இருக்கின்றன என்பதற்கு அரசிடம் புள்ளி விவரங்கள் இருக்கிறதா? என்ற கேள்வியைக் கேட்பதற்கும் நீதிமன்றங்கள் தயாராக இல்லை. ஆனால், நீட் தேர்வு என்றால் மட்டும், அதன் பாதிப்புகளுக்கான புள்ளி விவரங்கள் இருக்கின்றனவா? என்று நீதிமன்றங்கள் கேட்கும்.

உயர்ஜாதி ஏழைகள் ஒதுக்கீடு வருவதற்கு முன்பு தகுதி போய்விட்டது. நல்ல மதிப்பெண் பெற்ற தகுதியான வர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று கூப்பாடு போட்ட பார்ப்பன சனாதன கூட்டம் அதற்குப் பிறகு மதிப்பெண் தான் தகுதிக்கான அடிப்படை என்று கேட்பதில்லையே ஏன் ?

பழங்குடிப் பிரிவு மாணவர்களைவிட குறைந்த ‘கட்ஆப்’ மதிப்பெண் பெற்று உள்ளே நுழையும் வாய்ப்புகள் கிடைப்பதால் தானே?

ஒன்றிய ஆட்சியின் இரட்டை வேடத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். மோடி பிற்படுத்தப்பட்டவர்; பா.ஜ.க. பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரானது அல்ல என்று பேசுகிறார்கள். இவர்கள் தான் திறந்த போட்டியில் தகுதி அடிப்படையில் இடம் பிடிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் 10 சதவீத இடங்களைப் பறித்து, முன்னேறிய சாதியினருக்கு வாரிக் கொடுக்கும் இந்த இடஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்; அதுவும் அவசர அவசரமாக எந்த ஆய்வுகளும் இல்லாமல் ஒரே வாரத்துக்குள் செய்து முடித்தவர்கள்; அகில இந்திய மருத்துவப் படிப்புக்கான பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டை வழங்க மறுத்தவர்கள்; மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி தான் உச்சநீதிமன்றம் சென்று அந்த உரிமையை மீட்டெடுத்தது. கிராமப்புற மாணவர்கள், மருத்துவக் கனவை சீரழிக்கும் ‘நீட்’டைத் திணித்தது யார்? அந்தப் பாதிப்பிலிந்து அரசுப் பள்ளி மாணவர்களை மீட்டெடுக்க 7.5 உள் ஒதுக்கீட்டை தமிழக அரசும், புதுவை காங்கிரஸ் அரசும் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து மனு போட்டது இதே ஒன்றிய ஆட்சி தான். புதுவை முதல்வர் நாராயண சாமி, 10 சதவீதம் உள்ஒதுக்கீட்டு ஆணை பிறப்பித்தார். இது நீட் தேர்வுக் கொள்கைக்கே எதிரானது என்று நீதிமன்றத்தில் வாதாடியது ஒன்றிய ஆட்சி.

அயோத்தி கோயில் வழக்கில் ‘இராம பகவானுக்காக’ சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் சனாதனத்தின் புராணப் பிரசங்கியாக மாறிய உச்சநீதிமன்றம் இந்தத் தீர்ப்பிலும் அதே சட்ட மீறலை தீர்ப்புகளாக்கியிருக்கிறது. இது மற்றொரு ‘அயோத்தி தீர்ப்பு’.

உயர்ஜாதியினருக்கு ஆதரவானது இந்தத் தீர்ப்பு என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

வேத காலத்தில் தொடங்கிய போராட்டம் ஓயவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுடன் உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்கிறது பார்ப்பன இறுமாப்பும், இந்த மறுப்புக்கும் இறுமாப்புக்கும் நீதிமன்றம் சனாதனம், ஆகமம், ஒற்றை இந்தியம் அரண்களாக நிற்கின்றன; பார்ப்பன எதிர்ப்புக் களம் கூர்மையடைந்து வருகிறது.

சமூக – இன விடுதலைக்கான தீர்வு – இந்தப் போராட்டத்தில் தான் மய்யம் பெற்றிருக்கிறது என்பதை வரலாற்றுப் போக்கு உறுதி செய்கிறது.

# கடலூர், கரூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல்கள்

6.11.2022 அன்று காலை 11 மணிக்கு புவனகிரி நகரத்தை அடுத்த கீரபாளயத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் கடலூர் மாவட்ட கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் பிரகாஷ் வரவேற்பு கூறினார்.

மாவட்டச் செயலாளர் சிவக்குமார், அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் அறிவழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டத் தலைவர் அ.மதன்குமார் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராகக் கழகத்தின் தலைமை செயற்குழு உறுப்பினர் அய்யனார் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் கடந்த 15.10.2022 அன்று புவனகிரி நகரத்தில் நடைபெற்ற தந்தை பெரியாரின் 144வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1) 15.10.2022 அன்று சனாதனத்தை வேரறுக்க உறுதியேற்போம் என்ற கொள்கை முழக்கத்தோடு நடைபெற்ற நடைபெற்ற தந்தை பெரியாரின் 144வது பிறந்தநாள் விழா பொதுகூட்டத்திற்கு பெரும் உழைப்பை செலுத்திய, நிதி அளித்து பங்களிப்பை செலுத்திய அனைத்து தோழர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்படு கிறது.
2) தொடர்ச்சியாக ஒன்றிய அரசு மேற்கொள்ளும் இந்தித் திணிப்பு முயற்சிகளைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
3) 2023ஆம் ஆண்டிற்கான புரட்சிப் பெரியார் முழக்க சந்தாக்களை வசூலித்து உரிய நேரத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

இறுதியாக புதிய பொறுப்பாளர்களாக சதிஷ் - கழக மாவட்ட அமைப்பாளர், சிவா- இளைஞரணி மாவட்ட அமைப்பாளர், பிரேம் - தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்படுகிறது. பிரேம் நன்றி கூறினார்.


**கரூர் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் கரூர் மாவட்ட கலந்தாய்வு கூட்டம் 06.11.22 அன்று காலை கரூர் ஜவகர் பஜார் ரவி மினி ஹாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், ஓய்வு பெற்ற ஆசிரியர் இராமசாமி மற்றும் தோழர்கள் பழனிசாமி, மோகன்தாசு, காமராஜ், வடிவேல் ராமசாமி, செந்தில்குமார், விஜயமோகன், விஜயகுமார், நிகில் கார்த்திக், அண்ணாதுரை, அறிவழகி, அய்யப்பன், பிரபாகரன், கபிலன், நிலவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1) மாவட்டக் கழகத்தினைக் கட்டமைக்கும் வரை வடிவேல் ராமசாமி மாவட்ட அமைப்பாளராக செயல்படுவார்.
2) மாதந்தோறும் கலந்தாய்வு கூட்டங்களை நடத்துவது.
3) வரும் நவம்பர் 26 அன்று ஜாதி ஒழிப்பு மாவீரர் நாளையொட்டி தெருமுனை கூட்டங்களை நடத்துவது.
4) பெரியார் முழக்க சந்தா சேர்த்தலை விரைவுபடுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### தமிழர்களுக்கு செல்வாக்கும் சக்தியுமுள்ள பத்திரிகையில்லை



“நம் நாட்டில் தமிழர்களில் எத்தனையோ யோக்கியர்கள், விவேகிகள், கெட்டிக்காரர்கள் இருந்தா லும் அவர்கள் பொது ஜனங்களுக்குத் தெரியக் கூடாத வராய் இருக்கிறார்கள். இதன் காரணம் தமிழர்களுக்கு செல்வாக்கும் சக்தியுமுள்ள பத்திரிகையில்லை.

மகாத்மா காந்திக்கே தமிழ்நாட்டில் தமிழர் யோக்கியதை தெரிய வேண்டுமானால், ஒரு பிராமணனைக் கொண்டோ, ஒரு பிராமணப் பத்திரிகையைக் கொண்டோ தான் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் யோக்கியதை தமிழ்நாட் டினருக்குத் தெரிய வேண்டுமானால் பிராமணப் பத்திரிக்கையின் மூலமாகத்தான் அறிய வேண்டியிருக் கிறது. இதைவிடத் தமிழர்களுக்கு வேறு இழிவு வேண்டியதே இல்லை. 100–க்கு 90–க்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள கூட்டத்தாருக்கு தங்கள் நாட்டில் தங்களைப் பற்றி தங்கள் சமூகத்தாரே அறிந்து கொள்ள ஒரு சாதனம் இல்லை என்றால் இதைப் பற்றி என்ன நினைப்பது?”

– ‘குடிஅரசு’ 02.08.1925

## பேராசிரியர் வீ. அரசு ஆய்வுரை

# வள்ளலாரின் சத்திய ஞான சபையில் ஜாதி மதம் மறுக்கப்பட்டது

*சென்னை மாவட்டக் கழகம் சார்பாக, ‘வைதீகத்தை எதிர்த்த வள்ளலார்’ என்ற தலைப்பில், 22.10.2022 அன்று சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் “வள்ளலாரின் இறுதிப் பத்தாண்டுகள்” என்ற தலைப்பில் பேராசிரியர் வீ.அரசு ஆற்றிய உரை.*

*உரையில் இராமலிங்கனாரின் பிறப்பு முதல் அவர் சென்னைக்கு குடியேறி பிறகு சென்னையை விட்டு வெளியேறி சன்மார்க்க சங்கத்தை உருவாக்கியது வரை, வள்ளலாரின் இளமைக்கால வரலாறுகளில் தொடங்கி வள்ளலாரின் வைதீக எதிர்ப்பு எப்படி பரிணமித்தது என்பதை பேராசிரியர் விளக்குகிறார். அதில் ஒரு பகுதி:*

“சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம்”. வள்ளலார், மதம், சமயம் என்று இரண்டையும் வேறுபடுத்தி காட்டுகிறார். மதம் என்பது, வடமொழி மரபு சார்ந்த, சமஸ்கிருத மரபு சார்ந்த, ஆன்மீக மரபு சார்ந்த அவைதீகத்திற்கு எதிரான வைதீகர்களால் கட்டமைக்கப்பட்ட புராணியத் தன்மைகளைக் கொண்டவை மதங்கள். சமயங்கள் என்று சொல்லக்கூடியவை, பாசுரங்கள், தோத்திரங்கள் இப்படிப் பாடல்களைப் பாடி இந்தப் பாடல்கள் வழியாக உருவான நாயன்மார்கள், தாயுமானவர் போன்றவர்களாளெல்லாம் உருவானவற்றை சமயங்கள் என்கிறார். இப்படி இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்கிறார். சைவம், வைணவம் முதலிய சமயம், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களில் இலட்சியம் வைக்க வேண்டாம் என்கிறார். “அவற்றில் தெய்வத்தைப் பற்றி குழுவக்கூடியதாக குறித்திருக்கிறதே அன்றி புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயில்வோமானால் நமக்குக் காலமில்லை, அதனால் அவற்றில் இலட்சியம் வைக்க வேண்டாம். ஏனெனில் அவைகளில் சமய மதங்களில் அற்ப பிரயோஜனங்கள் பெற்றுக் கொள்ளக்கூடுமே ஒழிய ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை உண்மை எனும் ஆன்ம அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் நமக்கு காலமில்லை மேலும் இவைகளுக்கெல்லாம் சாட்சியமாக நானே இருக்கிறேன்” நானே இருக்கிறேன் என்று அவர் வெளிப்படுத்துவது தனது சொந்த அனுபவத்தின் மூலமாக அறிந்தவை. நான் பெற்றவற்றை, நான் அறிந்தவற்றை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அதை நீங்கள் பின்பற்ற வேண்டும். “சாதியும், மதமும், சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி”. “சாதி, சமய சடங்கை விட்டேன், அருட் ஜோதியைக் கண்டேன்”. இப்படி பல விசயங்களை வெளிப்படுத்துகிறார்.

இப்படி ஜாதி, மத, சமயங்களுக்கு எதிராக அவர் பாடிய பாடல்களைத் தொகுக்கின்ற காலம் வருகிறபோது, அது சார்ந்த அமைப்புகளை அவர் உருவாக்குகிறபோது, இவரின் ஜீவகாருண்யம், தயவு, அது சார்ந்து இவர் மனித வாழ்க்கையின் மீது கொண்ட அன்பு இவற்றைச் சார்ந்து அவர் செயல்பட்ட அனைத்து முறைமைகளுக்கும் கடுமையான சிக்கல்கள் வருகிறது. இது தான் வள்ளலார். அவர் மிக மகிழ்ச்சியாகவெல்லாம் வாழ்ந்து விட்டுப் போகவில்லை. 1865இல் சன்மார்க்கம் என்பதை அவர் அறிவிக்கிறார்.

கிறிஸ்துவத்தில் உள்ள ஜீவகாருண்யத்தைப் போல நமது தமிழ் மரபுகளில் உள்ளதைத் தேடி கட்டமைப்பதில் அவர் பயிற்சி பெற்றிருந்தார். கிறிஸ்துவத்தில் ஜீவகாருண்யம் போன்றவைக்




கூடுதலாக இருப்பதை நாம் பார்க்க முடியும். இந்து மதம் என்று பார்த்தால் அதில் அப்படி எதுவும் இல்லை. சமயங்களோ, மதங்களோ ஒரு கடவுள் வழிபாடுகளைத் தவிர்த்து, சடங்குகளைத் தவிர்த்து மனித மேம்பாடுகளுக்காக என்ன செய்தது என்று கேள்வி எழுப்பினால் அதற்கு விடை இருக்காது. ஏனென்றால் அவைகள் ஒன்றும் செய்யவில்லை என்பதே பதில். ஆனால், கிறிஸ்தவத்திலோ, இஸ்லாத்திலோ மனித வாழ்வியலைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும். கிறிஸ்துவர்கள் இங்கே வந்த உடன் என்ன செய்தார்கள் ? பட்டினியாக இருந்தவர்களுக்கு உணவு கொடுத்தார்கள். மருத்துவமனை கட்டினார்கள். எந்த இடத்திலாவது, சைவமோ வைணவமோ,

> - *சைவமோ, வைணவமோ மக்களுக்குப் பசியாற்ற வேண்டும் என்று கூறியதே இல்லை. கிறிஸ்தவம் மக்கள் சேவையையே தனது கொள்கையாக்கியது.*
> - *வள்ளலார் அமைப்புக்குள்ளேயே அவருக்கு எதிராக நாச வேலைகள் நடந்தன.*

மக்களுக்கு உணவு கொடுப்பதைப் பற்றியோ, உடல்நிலை சரியில்லையென்றால் சரி செய்வது பற்றியோ கூறியிருக்கிறதா ?

பிற்காலச் சோழர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? 8ஆம் நூற்றாண்டில் சங்கராச்சாரி, இங்கே வருகிறார். சங்கராச்சாரி இங்கே வருகிறபோது ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டி வருகிறார். அவர்கள் தான் ’ஸ்மார்த்தப் பார்ப்பனர்கள்’ என்று சொல்லக் கூடியவர்கள். அவர்கள் அனைவரும் இந்த இரஜாக்களைச் சுற்றி வளைக்கிறார்கள். அதனால் தானங்கள் அனைத்தையும் பெறுகிறார்கள். கோவிலுக்குள் உட்கார்ந்து கொண்டு கருவறைக்குள் இராஜாக்களுக்குக் கூட அனுமதி மறுக்கிறார்கள். நமது தமிழ் மொழியை தூக்கி எறிந்தார்கள். முழுதாக சமஸ்கிருத மொழியைக் கொண்டு வந்தார்கள்.

எனவே, சமஸ்கிருதம் என்பது கடவுள் மொழி, அதைப் பேசுகிறவர்களை எதுவும் செய்யக் கூடாது என்று பார்ப்பனர்களுக்கான அதிகாரங்களை கொடுத்தார்கள். மிகப்பெரிய கட்டிடக்கலை, கோவில்களை கட்டியிருந்தாலும் அதில் முழுதாக பார்ப்பனர்களின் ஆதிக்கம் இருந்தது. இதை தற்போதைய காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், வட இந்தியாவில் இருந்து இந்தி, இந்தி என்று திணிக்கிறார்களே அதன் மூலம் அனைத்தையும் செய்து விடலாம் என்று நினைக்கிறார் களல்லவா ? அதே போல, 8ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருதம் மூலமாக செய்து முடித்தார்கள். இந்த சமஸ்கிருதங்களை, சடங்குகளை வள்ளலார் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சன்மார்க்கத்தை அறிவித்த 1865 முதல் 1874 வரை மிகப் பெரிய புரட்சியாளராக அவர் வாழ்ந்திருக்கிறார்.

35 வயது முதல் அவர் பாசுரங்களைப் பாடியிருந்தாலும் அவர் 1865 இல் இருந்து களத்தில் இறங்குகிறார். சன்மார்க்கத்திற்கான விதிகளை உருவாக்குகிறார். அதில் சாதி மறுப்பு, சமய மறுப்பு ஆகியவகளை விதிகளாகக் கொண்டு வருகிறார். 1867 இல் வள்ளலாரின் பாடல்களைத் தொகுத்து முதன் முதலாக அச்சிட்டுக் கொண்டு வருகிறார்கள். வேலாயுதம் முதலியார் அவருடன் 1849 முதல் இருக்கிறார். அவர் முயற்சியால் தான் வள்ளலாரின் பாடல்கள் தொகுக்கப்படுகிறது. ஆனால், வள்ளலார் தனது பாடல்களைத் தொகுக்கக் கூடாது என்கிறார். உடன் இருந்தவர்கள் உணவு உண்ண மாட்டோம் என்று கூறி அவரை சம்மதிக்க வைத்தார்கள். அப்படி தொகுக்கப்பட்டது தான் “அருட்பா”. இது ஆறுமுக நாவலருக்கு பிடிக்கவில்லை. ஏன் பிடிக்கவில்லை? வள்ளலார் கருணீகர் குலத்தைச் சேர்ந்தவர். ஒரு கருணீகர் அருட்பா பாடுவதா? என்பதே நாவலரின் எண்ணம். சைவ வேளாளர்கள் அல்லது பார்ப்பனர்கள் தான் அருட்பா பாட முடியும் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கிறார்கள். கடலூர் நீதிமன்றத்தில் வழக்கு போடப்படுகிறது. இப்படி அவருக்கு என்னென்ன உளைச்சல் களைக் கொடுக்க முடியுமோ அப்படி அவரது பாடல்கள் வந்த உடனே தரத் தொடங்கி விட்டனர். இப்படி ஜாதி எந்தெந்த வடிவங்களில் வருகிறது என்பதை வள்ளலார் உணர்கிறார். இதனால் வள்ளலார் மனரீதியாக பாதிக்கப்படுகிறார். வள்ளலார் கருணையின் வடிவம். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் உண்மை யாகவே வாடினார். வா, வா என்று எதுகை மோனைக்காக எழுதியவர் இல்லை. இந்த ஜாதிய ரீதியான தொந்தரவுகள் 1865 முதல் 1930 வரை தொடர்ந்தார்கள். இந்த காலகட்டத்தில் தான் தமிழில் ‘கண்டனம்’ என்ற விசயம் அதிகமாக நடந்தன. கிறிஸ்துவர்களை எதிர்த்து எழுதுவது, அதற்கு கிறிஸ்துவர்கள் எழுதுவது, சைவர்களை எதிர்த்து வைணவர்கள் எழுதுவது என்று இப்படி பல விசயங்கள் நடைபெற்றன. 1878 முதல் 1888 வரை செயல்பட்ட “மெட்ராஸ் லௌகீக சங்கம்” என்ற ஒரு அமைப்பை எதிர்த்து, யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய சபாபதி நாவலர் என்கிற வெள்ளாளர் இரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார். ஏனென்றால் மெட்ராஸ் லௌகீக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நாத்திகத்தை பேசினார்கள், மூட நம்பிக்கையை மறுத்தார்கள். பெரியபாளையத்தம்மன் கோவிலுக்குச் செல்வதைப் பற்றி லௌகீக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கட்டுரை எழுதினார்கள், “பெரிய பாளையத்தம்மன் கோவிலுக்குப் போவதேன், வாந்தி, பேதி வந்து சாவதேன்?” இதை 1883இல் எழுதினார்கள்.

அய்ரோப்பிய புத்தொளி இயக்கம் நமது மண்ணில் செல்வாக்கு செலுத்தியது அந்த காலத்தில். வங்காளத்தில் செல்வாக்கு செலுத்தியதாகக் கூறிவார்கள். ஆனால் அங்கே செலுத்தியது ஒரு வகையான அரசியல் செல்வாக்கு. சமய மறுப்போ, கடவுள் மறுப்போ அங்கு இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் தான் கடவுள் மறுப்பு, சமய மறுப்பு என்று புத்தொளி மரபு வேகமாக உருவானது. அந்த மரபு உருவான காலத்தில் இந்தச் செயல்பாடுகளைக் கவனித்து வருபவராக வள்ளலார் இருந்திருக்கிறார்.

அவர் இந்தக் கடவுள் என்ற ஒன்று கூறுவதற்கு ஜீவகாருண்யத்தில் இருந்து கூற முயற்சி செய்து சன்மார்க்கத்தை உருவாக்குகிறார். எனவே, அருட்பாவில் ஒரு தலைவலியை உருவாக்கினார்கள். அதன் பிறகு ’சத்திய தருமச் சாலை’ என்ற ஒன்றை உருவாக்கிறார். இதற்கு பொருள் என்னவென்றால் ‘அணையா அடுப்பு’. இன்றைக்கும் வடலூரில் அந்த அடுப்பு எரிந்து கொண்டே இருக்கிறது. ஒரு நாளைக்கு 1000 முதல் 2000 பேர் உணவருந்துகிறார்கள்.

(4ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 10.11.2022

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சேலம் மாவட்டம் சார்பாக 2023 'புரட்சிப் பெரியார் முழக்க' சந்தாக்கள் சேர்ப்பதாகத் தீர்மானம்

சேலம் மாவட்டக் கழகங்களின் சார்பாக 1.11.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 2023 'புரட்சிப் பெரியார் முழக்க' சந்தாக்களை சேர்க்க வேண்டும் என்று கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சேலம் மேற்கு மாவட்டம் :** 01.11.2022 செவ்வாய் மாலை 6.00 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் மேட்டூர் நகர படிப்பகத்தில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1) 2023ஆம் ஆண்டு பெரியார் முழக்க சந்தாக்களாக 2023 சந்தாக்களை சேலம் மாவட்டத்தின் சார்பாக (கிழக்கு - மேற்கு) தலைமைக் கழகத்திற்கு டிசம்பர் 15ஆம் தேதி அன்று வழங்குவதென முடிவு செய்யப்பட்டது

2) அய்ந்தாண்டு சந்தாவாக சேலம் மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக 100 சந்தாக்களுக்கான தொகையினை நவம்பர் 26 அன்று ஜாதி ஒழிப்பு நாளில் தலைமைக்கு ஒப்படைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

3) நவம்பர் - 26 ஜாதி ஒழிப்பு நாளில் சேலம் மாவட்ட நகர, ஒன்றிய, கிளைக் கழக பகுதிகளில் ஜாதி ஒழிப்பு நாள் குறித்த விளக்கத் துண்டறிக்கைகள் பொது மக்களிடம் விநியோகிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், அ.சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நங்கவள்ளி, மேட்டூர் RS, மேட்டூர் நகரம், கொளத்தூர், காவலாண்டியூர் ஆகிய பகுதிகளில் இருந்து ஒன்றிய, நகர, கிளைக் கழக பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர். நிறைவாக நகர செயலாளர் சு.குமரப்பா நன்றியுரை கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது.

**மேட்டூர் நகரம் :** 04.11.2022 வெள்ளி மாலை 6.00 மணியளவில் மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் மேட்டூர் நகர படிப்பகத்தில் நகர செயலாளர் சு.குமரப்பா தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1) மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 2023ஆம் ஆண்டு 'புரட்சிப் பெரியார் முழக்க' சந்தாவாக 1000 அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

2) 'புரட்சிப் பெரியார் முழக்கம்' 5 ஆண்டு சந்தாவாக மேட்டூர் நகரக் கழகத்தின் சார்பாக 25 சந்தா அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

3) நவம்பர் - 26 சட்ட எரிப்பு நாளில் மேட்டூர் நகரப் பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் நகரப் பொறுப்பாளர்களும், தோழர்களும், மாவட்டப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். நிறைவாக நகரத் தலைவர் செ.மார்ட்டின் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது.

**சேலம் கிழக்கு மாவட்டம் :** 06.11.2022 ஞாயிறு காலை 11.00 மணியளவில் சேலம் கருப்பூர் சக்திவேல் இல்லத்தில் சேலம் கிழக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் கிழக்கு மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்திவேல் தலைமையில் கடவுள் மறுப்பு கூற தொடங்கி நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 2023ஆம் ஆண்டு புரட்சி பெரியார் முழக்க ஆண்டு சந்தாவாக 500 சந்தாக்களும், அய்ந்தாண்டு சந்தாவாக 40 சந்தாக்களும், தலைமைக்கு டிசம்பர் 15ஆம் தேதி ஒப்படைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

2) சேலம் மாவட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக மண்டல மாநாட்டினை வருகின்ற டிசம்பர் மாதம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

3) நவம்பர் - 26 சட்ட எரிப்பு நாளில் சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்ட எரிப்பு நாளை விளக்கி துண்டறிக்கை விநியோகிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஏற்காடு பகுதியின் சார்பாக மண்டல மாநாட்டிற்கு ரூ 50,000/-ம் மற்றும் கழகத் தலைவர் பிரச்சார வாகனம் வாங்குவதற்கு ரூ 50,000/- வழங்குவதாக ஏற்காடு பெருமாள் கலந்துரையாடல் கூட்டத்தில் அறிவித்தார்.

கலந்துரையாடல் கூட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.டேவிட், மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் சக்திவேல் மற்றும் மாநகர, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக சேலம் மாநகரத் தலைவர் சரவணன் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது.

கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் கருப்பூர் சக்திவேல் இல்லத்தில் மதிய உணவாக மாட்டுக்கறி உணவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.

---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் ? மனிதனுக்கும், அவனது பசிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதைத்தான் தத்துவமாக கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் எழுதி வைத்தார்கள். பசி எப்படி வருகிறது இதற்கு காரணம் என்ன ? உழைப்பை யார் சுரண்டுகிறார்கள் ? என்று தான் 'கம்யூனிச அறிக்கை' யை உருவாக்கினார்கள். ஏறக்குறைய இதே போன்று தான் வள்ளலாரும், பசிப் பிணிக்கு எதிராக எப்படி செயல்பட முடியுமோ அப்படி செயல்பட்டு தான் இந்த சத்திய தருமச் சாலையை உருவாக்குகிறார். அடுத்ததாக சத்திய ஞான சபையை உருவாக்குகிறார். இது தான் ஒளி வழிபாடு. இப்படி வள்ளலார் உருவாக்கியவைகளை அப்போது இருந்தவர்கள் பாராட்டினார்களா ஆதரித்தார்களா ? என்றால் பெரிய சிக்கல் இருக்கிறது. அவர் இதை உருவாக்குகிறபோது பல எளிய மக்கள் நிலங்களை தானமாக கொடுக்கிறார்கள். ஆனால், வள்ளலாரின் அமைப்பிற்குள் புகுந்த சிலர் நாச வேலைகளில் ஈடுபடுகின்றனர். நிலங்களை பட்டா போடுகிறார்கள். இப்படி பல துன்பங்களை அவருக்குக் கொடுக்கிறார்கள். அவற்றை வள்ளலார் பல கடிதங்கள் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தக் கடிதங்கள் பாலகிருஷ்ண பிள்ளை என்பவரால் 1930 இல் தொகுக்கப்படுகிறது. அந்தக் கடிதத்தில் ஒன்று, "இந்த சாலையால் எனக்கு மிகவும் சலிப்பு உண்டாகிறது. அந்த சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரமும் பண்ணும். ஆதலால் சாலையில் இருப்பவர்களெல்லாம் சன்மார்க்கத்திற்கு ஒத்து வாயடங்கி, மனமடங்கி இருக்க வேண்டும். என்மேற் பழியில்லை. சொல்லிவிட்டேன். பின்பு வந்ததைப் பட வேண்டும்" இப்படி அவர் கோபப்பட்டு எழுதுகிறார். இப்படி பல கடிதங்கள் உள்ளன.

இப்படி பல இடையூறுகள் அவருக்குக் கொடுக்கப்படுகின்றன. வடலூரில் இருந்தால் தாங்க முடியாது என்று அங்கிருந்து தள்ளி மேட்டுக் குப்பத்தற்கு செல்கிறார். மேட்டுக்குப்பத்திற்கு செல்கிற ஆண்டு 1873. அங்கிருந்து தான் அவர் அதிகமான உபதேசக் குறிப்புகளை வழங்குகிறார். இதில் தான் முழுமையாக ஜாதி எதிர்ப்பு, சடங்கு எதிர்ப்பு, சமய எதிர்ப்பு என்று அனைத்தையும் பதிவு செய்கிறார். இப்படி மன துன்பத்திற்கு ஆளாகி தான் 1873 இறுதியில் கதவை சாத்திக் கொண்டுவிட்டார். 1874 வாக்கில் வெளியே வந்து பேசுவார் என்று நினைத்தார்கள். அதன் பிறகு அங்கே திறந்து பார்த்தால் அதில் ஒன்றுமில்லை. அங்கு சாம்பல் இருந்தது, எலும்பு இருந்தது என்று கூறப்படுவது அனைத்தும் கதைகள். இதைப் பற்றி சென்னை லௌகீக சங்கம் நடத்திய 'தத்துவ விவேசினி' என்ற பத்திரிக்கையில் விரிவாகப் பதிவு செய்துள்ளார்கள். வள்ளலார் மறைந்து ஒன்பது ஆண்டுகள் கழித்து பதிவு செய்தனர்.

இரண்டு நிகழ்வுகள் நடந்திருக்க வேண்டும். ஒன்று அவர் தற்கொலை செய்திருக்க வேண்டும் அல்லது அவரைக் கொலை செய்திருக்க வேண்டும். இப்படித் தான் சென்னை லௌகீக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தத்துவ விவேசினியில் எழுதினார்கள். மறைமலை அடிகள் அங்கே சென்றிருக்கிறார் 'ஒன்றும் இல்லை' என்று தான் கூறினார். வெள்ளையர்கள் சென்று பார்த்தார்கள் ஒன்றுமில்லை என்று தான் கூறினார்கள். எப்படி நந்தன் தீக்குள் பாய்ந்து நேரடியாக சிவனிடம் சென்றார் என்று கூறினார்களோ அதே போல வள்ளலாரையும் கூறினார்கள். என்னைப் பொறுத்தவரை, ஒரு சிறு துன்பம் மனிதனுக்கு ஏற்பட்டாலும் தாங்க முடியாத வள்ளலார், அவ்வளவு இடையூறுகள் தாங்க முடியாமல் தற்கொலைக்குத் தூண்டுதலாக அமைந்திருக்கலாம். இல்லையென்றால் இவர் பேசிய சாதி, சடங்கு, சமய மறுப்புக்களை ஒத்துக் கொள்ளாத கூட்டம் அவரைச் சுற்றி இருந்தது. அவர்கள் இவரை ஏதேனும் செய்திருக்கலாம். இப்படி அவரையும் நந்தனைப்போல ஜோதியில் கரைந்து விட்டதாக கூறிவிட்டார்கள். நம்மவர்களும் அவர் ஜோதியில் கரைந்து விட்டார் என்றே கூறிக் கொண்டிருக்கின்றனர். ஒன்று அவர் தற்கொலை செய்திருக்கனும் அல்லது கொன்றிருக்க வேண்டும். இதற்கான ஆதாரங்களை நாம் தேடித் திரட்ட வேண்டும்.

இப்படி வள்ளலாரின் வரலாறைப் படிக்க வேண்டும். தமிழில் வள்ளலாரைப் பற்றி எழுதப்பட்ட வரலாறுகள் உண்மையானவை அல்ல. அனைத்தும் செவி வழிச் செய்திகள். (தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th November 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN